# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அருப்புக்கோட்டை

## அசல் வழக்கு எண்.81/2022

பிரதிவாதி தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.ரம்யா, கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

பெயர் ராஜேஸ்வரி பி.வா.சா.–1

க/பெ.

கிராமம் தொழில் –––

தாலுகா அருப்புக்கோட்டை வயது

---

முதல் விசாரணை 02–03–2026.

நான் இந்த வழக்கின் பிரதிவாதி. பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி என் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வழக்கறிஞர் விவரங்களை படித்துக்காண்பித்தபிறகு விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை பிரதிவாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) 28.11.2025ம் தேதிய கதவு எண்.2A உள்ள வீட்டிற்கு பிரதிவாதி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது அசல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 28.11.2025ம் தேதிய கதவு எண்.2A/1 உள்ள வீட்டிற்கு பிரதிவாதி பெயரில் உள்ள வீட்டு வரி ரசீது அசல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 16.03.2018 ம் தேதிய தாவாச்சொத்திற்கு பிரதிவாதியின் பெயரில் உள்ள டவுண் சர்வே ரிஜிஸ்டர் இணையதள நகல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 17.11.2022 ம் தேதிய அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் உத்தரவு சார்பு நகல் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S